රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන / தொலைபேசி:(94) 011- 2694560 / Telephone
ෆැක්ස් / தொலைநகல்:(94) 011- 2692254 / Fax
ඊ-මේල් / மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk / E-mail
වෙබ් අඩවිය / இணையத்தளம்: www.pubad.gov.lk / Web Site

මගේ අංකය / எனது இல / My No: COM/TRANS/V/වාස්මා-2022
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி: / Date: 2022.04.26

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2022ம் ஆண்டு இடமாற்ற கட்டளைகள் தொடர்பாக பொது சேவை ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்தல்**

மேற்படி விடயம் தொடர்பாக, எனக்கும் ஒரு பிரதியுடன் பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள, பொது சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இல: PSC / APL / 4/10/2022 மற்றும் 2022.03.31ம் திகதியிட்ட கடிதத்துடன் தொடர்புபட்டது.

02. இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2022ம் ஆண்டு இடமாற்ற கட்டளைகள் தொடர்பாக, பொது சேவை ஆணைக்குழுவிடம் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மேன்முறையீடுகள் தொடர்பிலும் அவ்வாணைக்குழுவின் தீர்மானங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன், அதன்படி 2022ம் ஆண்டு வருடாந்த இடமாற்ற கட்டளைகளின் முடிவுகள் பொது சேவை ஆணைக்குழுவின் இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன.

03. எவ்வாறாயினும், வருடாந்த இடமாற்றங்கள் நடைமுறைக்கு வந்த திகதிக்கு பின்னரும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் 2022ம் ஆண்டு வருடாந்த இடமாற்ற கட்டளைகளுக்கு எதிரான மேன்முறையீடுகள் பொதுச் சேவை ஆணைக்குழுவுக்கு தொடர்ந்து கிடைத்து வருவதனை அவதானித்த பொதுச் சேவை ஆணைக்குழுவினால், அந்த உத்தியோகத்தர்கள் உரிய காலத்திற்குள் தமது மேன்முறையீடுகளைத் தாக்கல் செய்யத் தவறிய காரணத்தினால், அவர்களிடமிருந்து பெறப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள் பரிசீலிக்கப்படாது என முடிவு செய்யப்பட்டுள்ளது. பொதுச் சேவை ஆணைக்குழுவின் இந்த முடிவை அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரிவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோக்கபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

பிரதி: செயலாளர், பொது சேவை ஆணைக்குழு - தயவுடன் தகவலுக்காக